


**23. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசுடன் மோதல் போக்கை த.வெ.க. அரசு கடைப்பிடிக்காது என்று முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

2. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சட்டப் பேரவையில் முதலமைச்சர் தொிவிப்பதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை மறு தேதி குறிப்பிடப்படாமல் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

4. புதுதில்லியில் 2-வது கட்டமாக 65 பேருக்கு பத்ம விருதுகள் இன்றுமாலை வழங்கப்படுகின்றன.

5. லண்டனில் நடைபெறும் ப்ரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

மத்திய அரசுடன் மோதல் போக்கை த.வெ.க. அரசு கடைப்பிடிக்காது என்று முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் திட்டவட்டமாக தொ◌ிவித்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தொ◌ிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று பதிலுரை வழங்கிய முதலமைச்சர், அதே வேளையில் மத்தியில் கூட்டாட்சி ! மாநிலத்தில் சுயாட்சி ! என்ற கொள்கை விட்டுக் கொடுக்க மாட்டாது என்று உறுதிபடக் கூறினார்.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசை, தமிழக அரசு எதிர்க்காது என்றும், மாநிலத்தின் வளர்ச்சி தான் இந்த அரசின் முக்கிய குறிக்கோள் என்றார்.

மக்கள் வரிப்பணத்தில் ஊழல் நடைபெறாது என்று கூறிய அவர், ஊழல் புரிந்தவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சமூகநீதி பற்றி தொ◌ிவித்த அவர், தமது அரசில் SC, ST பிரிவை சேர்ந்த 8 பேர் அமைச்சர்களாக உள்ளனர் என்றும், 4 பெண் அமைச்சர்கள் உள்ளதாகவும், கூறினார்.

அண்டை மாநிலங்களுடன் நட்புறவு பாதுகாக்கப்படும் என்று தொ◌ிவித்த அவர், சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்றும் தொ◌ிவித்தார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், போதைப் பொருள் நடமாட்ட பிரச்சனைகள் நீண்ட நாட்களாக இருப்பதாகவும், இவையணைத்தும் கட்டுப்படுத்தப்படும் என்று கூறினார்.

நீட் தேர்வை கைவிட்டு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இருமொழிக் கொள்கையை அரசு உறுதியாக கடைப்பிடிக்கும் என்றார்.

மின்வெட்டு குறித்து பேசிய முதலமைச்சர் கடந்த கால அரசின் நிர்வாக கோளாறே இதற்கு காரணம் என்று குற்றம் சாட்டினார்.

தற்போது மின் விநியோக நடைமுறைகள் முழுவீச்சில் கண்காணிக்கப் படுவதாகவும், விரைவில் மின்வெட்டு அறவே நீக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பயணித்தால் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உருவெடுக்கும் என்று குறிப்பிட்டார்.

கட்சிகள் கொள்கைகளால் வேறுபட்டிருந்தாலும், மக்கள் பணி ஆற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தமது அரசின் கீழ் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக கூறிய முதலமைச்சர் லஞ்சம் இல்லா அரசமைப்பை கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதனிடையே முதலமைச்சர் தமது பதிலுரையின் போது முந்தைய ஆட்சியில் டாஸ்மாக் பணம், கட்சி நிதி என்ற பெயரில் வசூலிக்கப்பட்டதாகவும், அந்த பணம் தற்போது கஜானாவிற்கு திருப்பி விடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

முதலமைச்சரின் இந்த கூற்றுக்கு எதிர்ப்பு தொிவித்து எதிர்கட்சி தலைவர் திரு. உதய நிதி ஸ்டாலின், இக்குற்றச்சாட்டிற்கு தகுந்த ஆதாரத்தை அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அப்போது பேசிய பேரவைத் தலைவர், முதலமைச்சர் பேசி முடித்ததும் எதிர்கட்சித் தலைவருக்கு கண்டிப்பாக பேச அனுமதி அளிக்கப்படும் என்றார்.

இதனை ஏற்க மறுத்து தி.மு.க. உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக குரல் எழுப்பினர்.

அவை முன்னவர் திரு. செங்கோட்டையன் உள்ளிட்டோர் பேரவைத் தலைவரின் அறிவிப்பை ஏற்று எதிர்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்றும், முதலமைச்சர் பேசி முடித்ததும் எதிர்கட்சி தலைவர் பேசலாம் என்றும் கூறினர்.

ஆனால் உடனடியாக பதிலளிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கோரி கூச்சலில் ஈடுபட்ட தி.மு.க. உறுப்பினர்களுக்கு அனுமதி தரப்படாததால் அதற்கு எதிர்ப்பு தொிவித்து எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின்

தலைமையில் அவையிலிருந்து ஒட்டுமொத்தமாக வெளிநடப்பு செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் சட்டப்பேரவையில் உள்ள விதிகளுக்கு ஏற்ப தம்மை பேச அனுமதிக்குமாறு கோரியதாகவும், அதற்கு அனுமதி மறுக்கப் பட்டதாகவும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் குறை கூறினார்.

மக்களின் குரலாக தாம் எழுப்பும் கேள்விகளுக்கு முதலமைச்சர் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. ஒத்திவைப்பு

தமிழக சட்டப்பேரவை மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் படுவதாக பேரவை தலைவர் திரு. J.C.D. பிரபாகர் அறிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி பேருந்து நிலையத்தில் தமிழக விவசாய சங்கம் சார்பில் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வேளாண் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யகோரி, மாநில அரசு வலியுறுத்தி இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து கைகளில் திருவோட்டை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று நெமிலி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

தேர்தலின் போது த.வெ.க. அரசு பயிர்கடன் தள்ளுபடி சம்மந்தமாக வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கோரி வட்டாட்சியரிடம் மனு அளித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

அமலாக்கத்துறை

ஆசிரியர் தேர்வு வாரிய முறைக்கேடுகள் தொடர்பாக சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய பகுதிகளில் உள்ள 18 வளாகங்களில் அமலாக்கத்துறை இயக்குநரகம் சோதனைகளில் ஈடுபட்டுள்ளது.

2017-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையின் அடிப்படையில் அமலாக்க இயக்குநரகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கான குற்றப்பத்திரிக்கை கடந்த 2021-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

பத்ம விருது

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் 2-வது கட்டமாக, 65 பேருக்கு பத்ம விருதுகளை இன்றுமாலை வழங்குகிறார்.

2 பத்ம விபூஷன், 7 பத்ம பூஷன், 56 பத்ம ஸ்ரீ விருதுகள் இதில் அடங்கும்.

குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திரைப்பட நடிகர் மம்முட்டி, கிரிக்கெட் வீரர் ரோஹித் ஷர்மா, டென்னிஸ் வீரர் விஜய் அமிர்த்தராஜ் உள்ளிட்டோர் இவ்விருதுகளை குடியரசு தலைவரிடமிருந்து பெறுகின்றனர்.

கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல், பொறியியல், பொதுவிவகாரங்கள், வர்த்தகம், தொழில்துறைகளில் சிறப்பாக செயல்படுபவர்களுக்கு ஆண்டுதோறும் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

தேசிய வேளாண் கூட்டுறவு சந்தை கூட்டமைப்பு மூலம் 74 லட்சம் விவசாயிகள் பயனடைவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இக்கூட்டமைப்பின் ஏல இணையதளமான nafex.in ஐ துவக்கி வைத்து அமைச்சர் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், மத்திய அரசின் சீரிய தலைமையில் நாடு வளர்ச்சியடனும், வளத்துடனும், துரிதமாக முன்னேறுவதாக தொிவித்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் வேளாண் துறையும், மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

வேளாண் உற்பத்தி 44 சதவிகிதம் அதிகரித்து உள்ளதோடு, பசுமை புரட்சி காலத்தை காட்டிலும் வேளாண் துறையின் வளர்ச்சி அதிகமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

இந்தியா - அமொிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை தாம் எதிர்நோக்கி உள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அமொிக்காவின் வர்த்தக பிரதிநிதியான ஜாமிசன் க்ரேர், இந்தியாவிற்கான அமொிக்காவின் தூதர் செர்ஜியோ கோர் ஆகியோரை சந்தித்து பேசிய பின்னர் சமூக வலைதளப்பதிவில் திரு. பியூஷ் கோயல் இதனை தொிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையே புதிய பொருளாதார வாய்ப்புகள் ஏற்படுவதோடு, அது சார்ந்த நட்புறவும் வலுப்படும் என்று அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ஜார்ஜ் குரியன்

மத்திய சிறுபான்மையின விவகாரம், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வள துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் இன்று தமது பதவியை ராஜினாமா செய்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலம் முடிவடைவதை அடுத்து இந்நடவடிக்கை.

அவரது பதவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஏற்றுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஈரோடு

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பண்ணாரி சாலையோர வனப்பகுதியில் கழுதைப்புலிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வரும் 30ம் தேதிவரை நேரடி சேர்க்கை நடைபெறுவதால் மாணாக்கர் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித் தலைவர் திருமதி. சினேகா அறிவுறுத்தியுள்ளார்.

2026-27-ம் ஆண்டிற்கான சமூக நல்லிணக்க ஊராட்சி விருது பெற விரும்பும் ஊராட்சிகள் விண்ணப்பிக்கலாம் என ஆதிதிராவிட நல இயக்குனரகம் அறிவித்துள்ளது.

உரிய ஆவணங்களுடன் விண்ணப்ப படிவங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அடுத்த மாதம் 31-ம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

லண்டனில் நடைபெறும் ப்ரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖